தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 25.

மேற்குறிப்பாணை எண். 00245/இ3/2016. நாள். 05.01.2016.

பொருள் : Bonus - Adhoc Bonus - Special Adhoc Bonus for the year 2014-2015 - Sanction - Orders - Issued.

பார்வை : G.O. (Ms) No. 1, Finance (Allowances) Department dated 04.01.2016.

-----

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

(ஒம்./–) கு.சோ. தண்டபாணி
இயக்குநரின் நேர்முக உதவியாளர்

பெறுநர்

1. முதல்வர்கள், அனைத்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள்.
2. இருப்புக் கோப்பு.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர் 5/1/16

5 - சன 2016

00245

கையெழுத்துத் தொடர்

©
தமிழ்நாடு அரசு
2016

# நிதி (படிகள்)த் துறை

## அரசு ஆணை எண்:1 நாள் 04.01.2016

*(மன்மத, மார்கழி–19, திருவள்ளுவர் ஆண்டு 2046)*

மிகை ஊதியம் – சிறப்பு மிகை ஊதியம் – 2014–2015 ஆம் ஆண்டு – அனுமதி – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

படிக்கவும்:–

1. அரசு ஆணை (நிலை) எண்.9 நிதி (படிகள்)த் துறை, நாள் 08.1.2015
2. மத்திய அரசு, புது டெல்லி, நிதியமைச்சகம், செலவுத்துறையின்அலுவலகக் குறிப்பாணை எண். 7 / 24 / 2007/E-III (A), நாள்.16.10.2015,

*****

**ஆணை:-**

முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை 2014–2015 ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியமாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

2. 2013–2014 ஆம் ஆண்டு வரை 'இ' மற்றும் 'ஈ' பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்களுக்கு, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை மிகை ஊதியமாக கணக்கிட்டு, உச்ச வரம்பினை ரூ.3,000/– ஆகக் கொண்டு, மிகை ஊதியத்தொகை வழங்கப்பட்டது. இதனை பின்பற்றி தற்போது முறையான காலமுறைச் சம்பளம் பெறும் 'இ' மற்றும் 'ஈ' பிரிவைச் (C & D Group) சார்ந்த அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட்ட பணியாளர்கள் ஆகியோருக்கு 2014–2015–ஆம் நிதியாண்டுக்காக, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை மிகை ஊதியமாக வழங்கப்படவேண்டும் என அரசு ஆணையிடுகிறது. மிகை ஊதியம் 31.3.2015 ஆம் நாளன்றுள்ளவாறான ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். மாதாந்திர ஊதியம் ரூ.3,000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) என்பதை உச்சவரம்பாகக் கொண்டு, மிகை ஊதியத்தொகை கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில் / திருத்திய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.3,000/– என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும். இந்த உச்சவரம்பு திருத்திய சம்பள வீதங்களுக்கு முந்தைய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் அல்லது திருத்திய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் இவற்றில் எந்த வகை ஊதியமாக இருப்பினும் இரண்டிற்குமே பொருந்தும்.

3. பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஊதிய விகிதம், அனைத்திந்தியப்பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட 'அ' மற்றும் 'ஆ' பிரிவைச் (A & B Group) சார்ந்தவர்கள், இந்த மிகை ஊதியத் திட்டத்தின் கீழ் வரமாட்டார்கள். அவர்கள் எந்தவொரு மிகை ஊதியத் தொகையைப் பெறவும் தகுதி உடையவர்கள் அல்லர். இந்த வகைப் பணியாளர்களுக்குச் சிறப்பு மிகை ஊதியம் வழங்க அரசு முடிவெடுத்து, பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சம்பள விகிதம், அனைத்திந்தியப்பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட 'அ' மற்றும் 'ஆ' பிரிவைச் (A & B Group) சார்ந்த பணியாளர்களுக்கு இந்த ஆண்டும் சிறப்பு மிகை ஊதியமாக ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. 2014-2015 ஆம் நிதியாண்டில் குறைந்த பட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்கள், தொகுப்பூதியம்/சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள்) கிராம உதவியாளர்கள் (Village Assistants), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் சிறப்பு கால முறை ஊதிய விகிதத்தில் (special time scale of pay) பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் /எழுத்தர்கள், ஒப்பந்த பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தற்காலிக உதவியாளர்கள், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் மற்றும் ஒரு பகுதி தினக்கூலிகளாக பணியாற்றி பின்னர் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாக பணியாற்றியவர்களுக்கும் சிறப்பு மிகை ஊதியம் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) அனுமதிக்கத்தக்கதாகும்.

5. மாநில அரசில் இருந்து நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றில் அயல்பணியில் பணியாற்றி வருபவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து மிகை ஊதியம் / பரிவுத் தொகை பெறாமல் இருந்தால் அவர்கள் இந்த மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர் ஆவார்.

6. மேலே பத்தி 2 முதல் 5 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் இந்த அரசாணையின் இணைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கத்தக்கதாகும்.

7. மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் குறித்த செலவு, சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய பணிக்கணக்குத் தலைப்பின் கீழ் நேர்விற்கேற்ப "01. சம்பளங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின் கீழ் வரும் "04. ஏனைய படிகள்" என்ற உள்நுணுக்கத் தலைப்பின்கீழ் அல்லது "02. ஊதியங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

8. 2003 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தற்காலிக உதவியாளர்களுக்கான சிறப்பு மிகை ஊதியம் தொடர்பான செலவினம் "33. தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல்" "04. ஒப்பந்த ஊதியம்" பணிக்கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

9. 2015–2016 ஆம் நிதியாண்டில் சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்புகளின் கீழ் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும், கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்புகளின் கீழ் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2015–2016–ம் நிதியாண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி தேவையான தொகையினை பெற்று செலவு செய்யலாம்.

10. இந்த ஆணை கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1840 (ஆயிரத்து எண்ணூற்று நாற்பது) ன் படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–22.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ்ரோடு சந்திப்பு, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
முதன்மைச் செயலாளர்/ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை 625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.

அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர்,மாநகராட்சி, சென்னை /மதுரை/ கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள். / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள். / அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், தரமணி, சென்னை.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

**<u>நகல் பெறுநர்</u>**

நிதி (அ.ந.மு.I)/(அ.ந.மு.II)/(அ.ந.மு.III)/(அநமு.பல்வகை)/(ஓ.கு.தீ)/( ஊ.கு.)/(வரவு செலவு–பொது II) /(வரவு செலவு–பல்வகை)/(பொது)த் துறை, சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக செயலாளர், நிதித் துறை, சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள் துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த் துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சிஅலுவலர், சம்பளஆராய்ச்சிப் பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத் துறை),அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

**// ஆணைப்படி; அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

## இணைப்பு

i) இந்த ஆணைகளின்படி மிகை ஊதியம் வழங்குவதற்கான ஊதியங்களை 31.3.2015 அன்றுள்ளவாறான அடிப்படைச் சம்பளம், சிறப்புத் தனிச் சம்பளம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதத்திலேயே சம்பளம் பெறும் பணியாளர்களைப் பொறுத்தவரையில் 31.3.2015 அன்றுள்ளவாறான அடிப்படைச் சம்பளம், தனிச் சம்பளம், சிறப்புத் தனிச் சம்பளம், அகவிலை ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் ஏனைய ஈட்டுப்படிகளை சேர்க்கக்கூடாது. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி–S) துறையின் 9.8.2010 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணையில் கண்டுள்ளவாறு அரசுப் பணியாளர்கள் 'அ', 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' பிரிவினர் என வகைப்படுத்தப்பட வேண்டும்;

ii) 31.3.2015 அன்று பணியிலிருந்து, 1.4.2014 லிருந்து 31.3.2015 வரையில் ஓர் ஆண்டு முழுவதும் பணியாற்றிய பணியாளர்கள் 30/30 நாட்களுக்குரிய ஊதிய வீதத்தில் இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள மிகை ஊதியத்தொகை முழுவதையும் பெறத் தகுதி உடையவர்களாவர்;

iii) 2014–2015 ஆம் ஆண்டில் ஆறு மாதமும் அதற்கு மேலும், ஆனால் ஓர் ஆண்டுக்குக் குறைவாகப் பணியாற்றியுள்ள பணியாளர்கள், விகிதாச்சாரப்படி மிகை ஊதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இவ்விதியில் செயல் நோக்கத்திற்காக, 15 நாட்களுக்குக் குறைவான பணிக்காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது; பதினைந்து நாட்களும் அதற்கு மேற்பட்ட பணிக்காலம் முழுமாதப் பணிக்காலமாகக் கருதப்படவேண்டும்;

iv) மிகை ஊதியம், முழு ரூபாய் மதிப்பில் கணக்கிடப்படும்; அதாவது, 50 காசுகளும் அதற்கு மேலும் இருந்தால், அடுத்த ரூபாய்க்கு முழுமையாக்கப்படவேண்டும்; 50 காசுகளுக்குக் குறைவான சில்லறை விட்டுவிடப்படவேண்டும்;

v) மிகை ஊதியத்தைக் கணக்கிடுவதற்கான பணிக்கால அளவில், சம்பளமில்லா விடுப்பு நீங்கலாக அனைத்து விடுப்புக்காலம் சேர்த்துக் கொள்ளப்படும். 2015 மார்ச்சு திங்களில் சம்பளமில்லா விடுப்பில் / அரை சம்பள விடுப்பில் / சம்பளம் இல்லாத கல்வி விடுப்பில் இருந்த பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் விடுப்பில் செல்வதற்குமுன் கடைசியாகப் பெற்ற ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு, மிகை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும்;

vi) 2014–2015 ஆம் ஆண்டில் எப்போதாவது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த பணியாளர்களைப் பொறுத்தவரையில், தற்காலிகப் பணிநீக்கக் காலத்தில் வழங்கப்பட்ட பிழைப்பூதியத்தை ஊதியமாகக் கருதக்கூடாது. அத்தகைய பணியாளருக்கு அவருடைய தற்காலிகப் பணி நீக்கக் காலம், பணிக்காலமாக முறைப்படுத்தப்படும்போது மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கலாம். ஏனைய இனங்களில் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியத்தை வழங்குவதற்கு தற்காலிக பணி நீக்கக் காலத்தை சேர்க்கக்கூடாது. 31.3.2015க்குப் பிறகு தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தால், மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கத் தடை ஏதுமில்லை;

vii) 31.3.2015க்கு முன் வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற / தாமாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் / பணியிலிருக்கும்போது காலம் சென்ற பணியாளர்கள் / பணியில் இருக்கும்போது பணியைத் தொடர இயலாத பணியாளர்கள் மேலே

பத்தி (iii)க்கு உட்பட்டு, அவர்கள் உண்மையில் ஆற்றிய பணிக்கால அளவின் அடிப்படையில் மிகை ஊதியம்/சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர்களாவர்;.

viii) வயது முதிர்வடைவதன்பேரில் ஓய்வு பெற்று மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உள்ளவர்கள் அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்பும் பின்பும் பணியாற்றிய மொத்தக் கால அளவு ஆறு மாத கால அளவுக்குக் குறையாமல் இருக்குமானால் மேலே பத்தி (ii) மற்றும் (iii)க்கு உட்பட்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முந்தைய மற்றும் பிந்தைய கால அளவுக்கான தகுதிப் பணிக்கால அளவு தனித்தனியாகக் கணக்கிடப்படவேண்டும். வயது முதிர்வடைந்து ஓய்வு பெறுவதற்கு முந்தைய கால அளவிற்கும், மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்குப் பிந்தைய கால அளவிற்கும் அனுமதிக்கத்தக்க மொத்த தொகை அனுமதிக்கத்தக்க மிகை ஊதியம்/சிறப்பு மிகை ஊதியத்தின் அளவிற்கு மிகைப்படாமல் வரையறை செய்யப்பட வேண்டும்; மற்றும்

ix) பிரிவு 'இ' யில் ஆறு மாதங்கள் மற்றும் அதற்கு மேல் பணிபுரிந்தவர்கள் விகிதாச்சார அடிப்படையில் மிகை ஊதியம் பெற தகுதிபடைத்தவர்கள் ஆவர். ஒரு பணியாளர் ஆறு மாதங்களுக்கும் குறைவாக தொகுதி 'இ' யில் பணிபுரிந்து, பின்னர் பிரிவு 'ஆ' வில் ஆறு மாதங்களுக்கு மேலாக பணிபுரிந்திருப்பாராயின் அவரது பணிக் காலம் முழுவதையும் கணக்கில் கொண்டு அவருக்கு முழு சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படலாம்.

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**

©
GOVERNMENT OF TAMIL NADU
2016

MANUSCRIPT SERIES

# FINANCE (ALLOWANCES) DEPARTMENT

## G.O.Ms.No.1,Dated:04.01.2016

*(Manmadha, Margazhi- 19, Thiruvalluvar Aandu 2046)*

**BONUS** – Adhoc Bonus – Special Adhoc Bonus for the year 2014–2015 – Sanction – Orders – Issued.

Read the following :-

1. G.O.Ms.No.9, Finance (Allowances) Department, dated 8.1.2015.
2. Government of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi Office memorandum 7 / 24 / 2007/E-III(A) dated 16.10.2015

*****

**ORDER:-**

Government has decided to grant Adhoc Bonus equivalent to 30 days emoluments on a base of 30 days a month to all regular and temporary Government employees, employees of Local Bodies and Aided Educational Institutions including teachers on regular time scales of pay for the financial year 2014-2015.

2. The employees in Groups 'C' and 'D' were paid Adhoc Bonus equivalent to 30 days emoluments subject to a ceiling of Rs.3,000/- during the year 2013-2014. Accordingly, Government direct that all regular and temporary Government employees who are on regular time scales of pay, employees of Local Bodies and Aided Educational Institutions including teachers on regular time scales of pay in 'C' and 'D' group be paid adhoc bonus equivalent to 30 days emoluments on a base of 30 days a month for the financial year 2014-2015. The Adhoc Bonus shall be computed on the basis of actual emoluments as on 31st March 2015. The amount of adhoc bonus shall be calculated as if monthly emoluments were Rs.3,000/- per month. In respect of those drawing pay in the pre-revised / revised scales of pay, the calculation of adhoc bonus shall be based on the emoluments drawn subject to the upper ceiling of Rs.3,000/- (Rupees Three thousand only) per month. The upper ceiling limit shall be applicable irrespective of whether the emoluments are drawn in the pre-revised or revised scales of pay.

3. The employees in Groups 'A' & 'B' including those coming under University Grants Commission (UGC)/ All India Council for Technical Education (AICTE)/ Indian Council of Agricultural Research (ICAR) scales of pay and All India Service Regulations are not covered by the bonus scheme and are not entitled to get any adhoc bonus amount. Government has decided to grant Special Adhoc Bonus to these employees and direct that employees in groups 'A' & 'B' including those on UGC / AICTE / ICAR scales of pay and All India Service Regulations be paid Special Adhoc Bonus of Rs.1,000/- (Rupees One thousand only).

4. The Special Adhoc Bonus of Rs.1,000/- (Rupees One Thousand only) shall also be admissible to full-time and part-time employees paid from contingencies at fixed monthly rates, employees on consolidated pay/special time scale of pay including employees in Nutritious Meal Programme/ Integrated Child Nutrition Project (Anganwadi Workers / Mini Anganwadi Workers). Village Assistants, Panchayat Assistants / Clerks on special time scales of pay in Village Panchayat under Rural Development and Panchayat Raj Department, Contract employees, Temporary Assistants on contract basis, the employees on daily wages and the employees partly worked on daily wages and subsequently brought under regular establishment and worked continuously for atleast 240 days or more during the year 2014-2015.

5. The deputationists from the State Government working in Corporations / Boards / Joint Sector companies who are not in receipt of bonus / exgratia payment from the undertakings concerned are eligible for the benefit of Adhoc Bonus / Special Adhoc Bonus.

6. The Adhoc Bonus/Special Adhoc Bonus sanctioned in paras 2 to 5 above shall be admissible subject to the conditions prescribed in the annexure to this order.

7. The expenditure on Adhoc Bonus/Special Adhoc Bonus shall be debited to the sub-detailed head "04 Other Allowances" under the detailed head "01. Salaries" or the detailed head "02. Wages" as the case may be, under the relevant service head of the department concerned.

8. The expenditure on Special Adhoc Bonus in respect of temporary Assistants appointed on contract basis in the year 2003 shall be debited to the Detailed / Sub-Detailed head "33-Payments for Professional and Special Services" "04 – Contract Payment" under the relevant service head of the department concerned.

9. Necessary provisions have been made under the relevant heads of account in BE 2015-2016. However, if additional provisions are required, it will be made under the relevant heads of account in FMA 2015-2016 and the required funds may be drawn pending such provision.

10. This order issues with the Additional Sanction Ledger No.1840 (One thousand eight hundred and forty)

(BY ORDER OF THE GOVERNOR)

**K.SHANMUGAM**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

**To**
All Secretaries to Government.
The Secretary, Legislative Assembly Secretariat, Chennai-9
The Secretary to the Governor, Chennai-22.
The Comptroller, Governor's Household, Raj Bhavan, Chennai-22.
The Governor's Secretariat, Raj Bhavan, Guindy, Chennai-22.
Tamil Nadu Information Commission, No.2, Thiyagaraya Salai, Eldams Road Junction, Chennai-18.
All Heads of Departments.

All Departments of Secretariat (OP/Bills)
All Sections in Finance Department.
All Collectors / All District Judges / All Chief Judicial Magistrates.
The Accountant General (Accounts and Entitlements), Chennai-18.
The Accountant General (Accounts and Entitlements), Chennai-18 (by name).
The Principal Accountant General (Audit I), Chennai-18.
The Principal Accountant General (Audit I), Chennai-18 (by name).
The Accountant General (Audit II), Chennai-18.
The Accountant General (Audit II), Chennai-18 (by name).
The Accountant General (CAB), Chennai -9 / Madurai.
The Principal Secretary/Commissioner of Treasuries and Accounts, Chennai-15.
The Pay and Accounts Officer (East) Chennai-5.
The Pay and Accounts Officer (Secretariat) Chennai-9.
The Pay and Accounts Officer (South) Chennai-35.
The Pay and Accounts Officer (North) Chennai-79.
The Pay and Accounts Officer, Madurai-1.
All Treasury Officers / All Sub-Treasury Officers.
The Chairman, Tamil Nadu Public Service Commission, Chennai-6.
The Commissioner of Tribunal for Disciplinary Proceedings, No.6, Manickeswari Road, Chennai-10.
The Registrar, High Court, Chennai-104.
The Registrars of all Universities/Agricultural University,Coimbatore.
All State owned Corporations and Statutory Boards.
The Commissioner, Corporation of Chennai/ Madurai / Coimbatore / Tiruchirappalli / Salem / Tirunelveli / Erode / Tirupur.
All Divisional Development Officers.
All Tahsildars / All Block Development Officers.
All Municipal Commissioners / All Revenue Divisional Officers.
All Chief Educational Officers.
The Project Co-ordinator, Tamil Nadu Integrated Nutrition Project, Tharamani, Chennai.
All Recognised Service Associations.

**Copy to:**

The Finance ((OP.I)/(OP.II)/(OP.III)/(OP.Misc.)/(PGC)/(PC)/(BG-II)/(BG-Misc)/ (Public), Chennai -9.
The Private Secretary to the Chief Secretary to Government, Chennai-9.
The Private Secretary to the Principal Secretary to Government, Finance Department, Chennai-9.
The Secretary to Chief Minister, Chennai-9.
The Secretary to Government of India, Ministry of Home Affairs, New Delhi.
The Secretary to Government of India, Ministry of Finance (Department of Economic Affairs), New Delhi.
The Secretary to Government of India, Ministry of Finance (Department of Expenditure), New Delhi.
The Secretary to Government of India, Ministry of Finance (Department of Banking and Revenue), New Delhi.
The Secretary to Government of India, Ministry of External Affairs, New Delhi.
The Senior Research Officer, Pay Research Unit, Ministry of Finance, (Department of Expenditure), Room No.261, North Block, New Delhi.
Stock File / Spare Copies.

**//Forwarded by : Order //**

**SECTION OFFICER**

**ANNEXURE**

i) The emoluments for purposes of Adhoc Bonus under these orders shall be worked out on the basis of basic pay, special pay, grade pay and dearness allowance as on 31st March, 2015 and in the case of employees remaining on the pre-revised scales of pay the emoluments shall be worked out on the basis of basic pay, dearness pay, personal pay, special pay and dearness allowance as on 31st March, 2015.The allowances such as House Rent Allowance, City Compensatory Allowance and other Compensatory Allowances shall not be included. The classification of Government servants as groups A, B, C & D shall be as ordered in G.O.Ms.No.111, Personnel & Administrative Reforms (S) Department, Dated: 09.08.2010;

ii) The employees who were in service on 31st March 2015 and have rendered a full year of service from 1st April 2014 to 31st March 2015 shall be eligible for the full amount of Adhoc Bonus sanctioned in this Order at the rate of 30/30 days of emoluments;

iii) The employees who have rendered service of six months and above, but less than a year during 2014-2015 shall be eligible for proportionate amount of Adhoc Bonus. For this purpose period less than 15 days shall be ignored and fifteen days and above shall be treated as a full month of service;

iv) The Adhoc Bonus shall be rounded to the nearest rupee, i.e., fraction of 50 paise and above shall be rounded to the next higher rupee and fraction below 50 paise shall be ignored;

v) The period of service for the purpose of computing Adhoc Bonus shall include all leave other than the Extraordinary Leave without Allowances. In the case of employees who were on Extraordinary leave without allowances / Half Pay / Study Leave without Pay during the month of March 2015, the Adhoc Bonus shall be determined based on the emoluments last drawn before proceeding on leave;

vi) In the case of employees under suspension at any time, during 2014-2015 the Subsistence Allowances paid during suspension shall not be treated as emoluments. Such an employee may be paid Adhoc Bonus / Special Adhoc Bonus as and when the period of suspension is regulated as duty. In other cases, the period of suspension shall be excluded for the purpose of Adhoc Bonus/Special Adhoc bonus. In the case of suspension, if any, after 31st March 2015 there shall be no bar for the payment of Adhoc Bonus / Special Adhoc Bonus;

vii) The employees who retired on superannuation / Voluntary retirement / died in harness / invalidated from service, etc., prior to 31st March 2015 are eligible for Adhoc Bonus / Special Adhoc Bonus on the basis of actual service, subject to provision in para (iii) above;

viii) The superannuated employees who were re-employed are eligible for Adhoc Bonus / Special Adhoc Bonus provided the period of service prior to and after re-employment taken together is not less than six months, subject to provision in para (ii) and (iii) above. In such cases, the eligibility period has to be worked out separately for the period prior to and after re-employment. The total amount

admissible, for the period prior to superannuation and for the period after re-employment shall be restricted to the maximum admissible Adhoc Bonus / Special Adhoc Bonus and

ix) The employees who have rendered service of six months and above in Group 'C' are eligible for proportionate Adhoc Bonus only. If an employee rendered less than six months of service in Group 'C' and more than six months in Group 'B', he may be allowed full Special Adhoc Bonus taking into account the entire service in that year.

**//True Copy//**

**SECTION OFFICER**